**உலகுக்கே பாடம் சொல்லும் ஒருங்கிணைந்த பண்ணை!**



நெல் விவசாயமும் கால்நடை வளர்ப்பும் கணவன் – மனைவி மாதிரி. இதில் ஏதாவது ஒண்ணு இல்லைனாலும்.. இன்னொன்று சிறப்பாக இருக்காது. அதிலையும் கால்நடைகள் வளர்த்தாதான், செலவே இல்லாம இயற்கை முறையில் வெற்றிகரமா நெல் சாகுபடி செய்ய முடியும்.

இயற்கை முறையில் நெல் சாகுபடி செஞ்சாதான், செலவே இல்லாம, ஆரோக்கியமா கால்நடைகளை வளர்த்து லாபம் பார்க்க முடியும்' என்று ஒன்றுக்குள் ஒன்று பின்னி பிணைந்து கிடப்பதை, அழகாக சுட்டிக்காட்டும் தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை அருகே உள்ள நைனான்குளம் கிராமத்தைச் சேர்ந்த வெங்கட்ராமன், வாய் வார்த்தையாக மட்டுமல்லாமல், அதை நடைமுறையிலும் செயல்படுத்தி வெற்றி கொடி நாட்டி வருகிறார்.

மொத்தம் 9 ஏக்கரில் இருக்கிறது அவருடைய பண்ணை. 40 மாடு, 10 ஆடு, 50 கோழி, அரை ஏக்கரில் மீன் குளம். 5 ஏக்கரில் நெல் விவசாயம், 2 ஏக்கரில் தீவனப் புல், கால் ஏக்கரில் கழிவுநீர் குட்டை, பண்ணையைச் சுற்றியும் நொச்சி, ஆடாதொடை போன்ற தாவரங்களால் அமைக்கப்பட்ட வேலி என ஓர் இயற்கை வேளாண்மைக் கல்விக் கூடமாகவும் காட்சியளிக்கிறது அந்தப் பண்ணை.

“கடந்த 30 வருடமா கால்நடைகள் வளர்க்கறதோட நெல் விவசாயத்தையும் இணைத்து செய்கிறேன். இரண்டு மாடு, இரண்டு ஆடு, நான்கைந்து கோழிகளைத்தான் ஆரம்பத்தில் வளர்த்னே. அதிலிருந்து பெருகினதுதான் இப்ப இருக்கிற 40 மாடு, 10 ஆடு, 50 கோழிகள்” என்று எடுத்ததுமே பெருமை பொங்க ஆரம்பித்த வெங்கட்ராமன், அந்த உற்சாகத்தோட தொடர்ந்தார்.

“இந்த எட்டு வருடமாகத்தான் இயற்கை விவசாயம் செஞ்சிக்கிட்டு இருக்கிறேன். ரசாயன உரங்களையும் பூச்சிக்கொல்லிகளையும் முழுமையா தவிர்த்ததுனால, வயல் முழுக்கவே மண்புழுக்கள் நிறைந்திருக்கு. இங்க நிறைய தவளைகள் வருது. பயிரோட அடிப்பகுதியில் பூச்சிகள் வந்தால், உடனே பிடித்து சாப்பிட்டுடுது.

கொக்கு பறபற!

இங்க கொக்குகளும் நிறைய வரும். பயிரோட நடுப்பகுதியிலேயும், மேற்பகுதியிலேயும் தீமை செய்யும் பூச்சிகள் இருந்தா, உடனே பிடிச்சிடும். இதனால் நெற்பயிர்ல கொஞ்சம் கூட பூச்சித் தாக்குதலே ஏற்படுவதில்லை. இதை விட இன்னொரு ஆச்சரியம்.. மாட்டைக் கடிக்கிற பேன், ஈக்களை எல்லாம் கூட இந்த கொக்குகள் பிடிச்சுடுது.

மாடுகளோட காதுக்குள்ள உட்கார்ந்திருக்கிற உன்னிகளை நம்மால் எடுக்க முடியாது. மாடுகளுக்கு இது பெரிய தொந்தரவா இருக்கும். பலவிதமான நோய்களும் உருவாகும். இது ஒரு தீர்க்க முடியாத பிரச்சனை. ஆனால், கொக்குகள், மெதுவாக தன் அலகால், மாடுகளோட காதுக்குள்ள உள்ள உன்னிகளை எல்லாம் வெளியில் எடுத்து சாப்பிட்டுடுது. ஈ, பேன், உன்னி இல்லாமல் இருந்தாலே மாடுகள் ஆரோக்கியமா வளரும்.இயற்கை விவசாயத்தில் இதுமாதிரி இன்னும் பல வகைகளில் கால்நடைகள் பயனடைகிறது. என்று அங்குலம் அங்குலமாக விவரித்தார்.

தொடர்ந்து பேசியவர், “இதுக்கு முன்னாடி ரசாயன உரமும், பூச்சிக் கொல்லியும் போட்டு விளைந்த நெல்லோட தவிடையும், வைக்கோலையும் மாடுகளுக்கு கொடுக்கும் போது, அடிக்கடி மடிவீக்க நோய் வந்து ரொம்பவே சிரமப்படும். பால் உற்பத்தியும் குறையும். இதுமாதிரி இன்னும் பல பிரச்சினைகள் இருந்தது. குறிப்பா, சரியான பருவத்தில் சினை பிடிக்காது. இப்ப இயற்கை முறையில் விளைந்த நெல்லோட தவிடையும் வைக்கோலையும் கொடுக்கிறதுனால், அது மாதிரி எந்த பிரச்சினையுமே இல்லை.

40 மாடு வைத்திருந்தாலும் வயலுக்கு அடியுரமா தொழுவுரத்தை கூட போடறதில்லை. மாட்டுச் சாணத்தில் ஒரு சிறு பகுதியை மட்டும் பஞ்சகவ்யா தயாரிக்கவும், மீன் குட்டைக்காகவும் எடுத்துக்கிட்டு, மீதியை வெளியில் விலைக்குக் கொடுத்துடறேன். மாட்டுக் கொட்டகையைக் கழுவி விடும் தண்ணீரை மட்டும் நெல் வயலுக்கும், தீவனப் புல்லுக்கும், மீன் குட்டைக்கும் பயன்படுத்திக்கிறேன். மேடான நிலத்தில் சுமார் கால் ஏக்கரில் சுற்றியும் வரப்பு அமைத்து, கழிவு நீர்க் குட்டையை உருவாக்கி இருக்கேன். மாட்டுக் கொட்டகையில் விழுந்து, கழிவு நீரோடு கலந்துதான் பயிர்களுக்கும், மீன்குளத்திற்கும் பாயும். இதுவே பயிருக்குத் தேவையான ஊட்டத்தைக் கொடுக்கிறது.

சாதாரண நடவு முறையில் குறுவை, சம்பானு இரண்டு போகமும் நெல் சாகுபடி செய்கிறேன். ஏக்கருக்க சராசரியா 2 ஆயிரம் கிலோ நெல் மகசூல் கிடைக்கிறது. நெல்லாக விற்பனை செய்யாமல் மதிப்புக் கூட்டி அரிசியா மாற்றி விற்பனை செய்கிறேன். இதிலிருந்து 1,200 கிலோ அரிசி, 800 கிலோ தவிடு கிடைக்கிறது. இந்தத் தவிடை கால்நடைகளுக்குத் தீவனமாப் பயன்படுத்திக்கிறேன். தீவனச் செலவு மிச்சமாகறதோட, நெல்லா விற்பனை செய்யறத விட

கூடுதல் வருமானமும் வருது. மொத்தம் 5 ஏக்கரிலிருந்து 6,000 கிலோ அரிசி கிடைக்கும். கிலோ 30 ரூபாய் வீதம், 1 லட்சத்தி 80 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். இரண்டு போகம் மூலமா வருடத்திற்கு 3 லட்சததி 60 ஆயிரம் கிடைக்கும்.

என்கிட்ட முரா இனத்தைச் சார்ந்த 20 எருமைகளும், தார்பார்க்கர், சாஹிவால், ஜெர்சி, ஹோல்ஸ்டையன் பிரிசீயன் இனங்களைச் சார்ந்த 20 பசுக்களும் இருக்கு. சுழற்சி முறையில் 6 எருமை மாடுகளிலிருந்து தினமும் 40 லிட்டரும், 4 பசு மாடுகள் மூலமாக தினமும் 20 லிட்டரும் பால் கிடைக்கிறது. இதில் கொஞ்சம் கூட தண்ணீர் கலக்காம நானே நேரடியா வீடுகளுக்கும், டீக்கடைகளுக்கும் வித்துடுவேன். எருமைப் பால் ஒரு லிட்டர் 30 ரூபாய், பசும்பால் 20 ரூபாய்னு விற்பனை செய்வதால் பாலுக்கு நல்ல விலை கிடைக்கிறது. பால் விற்பனை மூலமா வருடத்திற்கு 5 லட்சத்தி 76 ஆயிரம் ரூபாய் வருவாய் கிடைக்கிறது.

வருடத்திற்கு 100 டன் மாட்டுச் சாணத்தை விற்பனை செய்வேன். ஒரு டன் மக்கிய சாணம் 600 ரூபாய்னு விற்பனை செய்றது மூலமா வருடத்திற்கு 60 ஆயிரம் ரூபாய் வருவாய் கிடைக்கிறது. பசுஞ் சாணம். மாட்டுச் சிறுநீரைப் பயன்படுத்தி பஞ்சகவ்யாவும் தயாரித்து, ஒரு லிட்டர் 50 ரூபாய்னு, வருடத்திற்கு 500 லிட்டர் விற்பனை செய்கிறேன். இது மூலமா 25 ஆயிரம் ரூபாய் வருவாய் கிடைக்கிறது.

பள்ளை இனத்தைச் சார்ந்த 10 நாட்டு ஆடுகளும் வளர்க்கிறேன். இதில் 8 பெட்டை, 2 கிடாய். மூலமாக வருடத்திற்கு சுமார் 12 குட்டிகள் கிடைக்கிறது. குட்டிகளை 6 மாதம் வளர்த்து விற்பனை செய்வேன். ஒரு ஆடு 1,500 ரூபாய்னு வருடத்திற்கு 12 ஆடுகளை விற்பனை செய்வது மூலமாக 24 ஆயிரம் ரூபாய் வருவாய் கிடைக்கிறது.

47 நாட்டுக் கோழிகளும், 3 சேவரும் வளர்க்கிறேன். தீவனச் செலவுனு எதுவுமே செய்யறதில்லை. நிலத்தில் இருக்கிற புழு, பூச்சிகளையும், மாட்டுக்கொட்டகையில் சிதறிக் கிடக்கிற அடர் தீவனத்தையும் மட்டுமே சாப்பிட்டு வளருது. இந்தக் கோழிக மூலமாக வருடத்திற்கு சுமார் 1,000 முட்டைகளுக்கு மேல் கிடைக்கும். இதில், 500 முட்டையை தலா 4 ரூபாய் வீதம் விற்று விடுவேன். இதன் மூலமாக 2,000 ரூபாய் வருவாய் கிடைக்கும். மீதமுள்ள முட்டைகளை பொறிக்க வைத்து, வருடத்திற்கு 300 குஞ்சுகளை எடுத்துடுவேன். இந்தக் குஞ்சுகளை மூன்று மாதம் வளர்த்த சுமார் ஒரு கிலோ எடை வந்ததும் ஒரு கோழியை சுமார் 180 ரூபாய்க்கு விற்பனை செய்வேன். இதன் மூலம் வருடத்திற்கு 54 ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது.

மீன் குளத்திலிருந்து வருடத்திற்க்கு ஆயிரம் கிலோ மீன் கிடைக்கிறது. கிலோ சராசரியாக 80 ரூபாய் வீதம் வருடத்திற்கு 80 ஆயிரம் ரூபாய் வருவாய் கிடைக்கிறது. ஒட்டு மொத்தமாக 9 ஏக்கரிலிருந்து எட்டரை லட்ச ரூபாய் வரைக்கும் கிடைக்கும்" என்று மனநிறைவோடு பேசியவர், ஒருங்கிணைந்த பண்ணையம் அமைப்பது தொடர்பாக மேற்கொண்டும் தகவல்களைப் பகிர்ந்தார். அவை பெட்டிச் செய்தியில் இடம்பிடித்துள்ளன.

| ஒன்பது ஏக்கரில் ஒருங்கிணைந்த பண்ணையத்தின் செலவு, வரவு கணக்கு | | |
|---|---|---|
| **விவரம்** | **செலவு** | **வரவு** |
| நெல் ( 5 ஏக்கர்) உழவு முதல் அறுவடை வரை (இரண்டு போகம்) | 80,000 | |
| தீவனம் (2 ஏக்கர்) விதைக்குச்சி முதல் அறுவடை வரை | 5,000 | |
| மீன் (அரை ஏக்கர்) குளம் வெட்ட | 50,000 | |
| மீன் குஞ்சு (1,500) | 2,500 | |
| மீன் பிடிக்கக் கூலி | 1,000 | |
| பஞ்சகவ்யா தயாரிக்க | 40,000 | |
| பண்ணைப் பராமரிப்பு | 72,000 | |
| மகசூல் அரிசி 6,000 கிலோ x ரூ 30 x 2 முறை | | 3,60,000 |
| எருமைப் பால் 40 லிட் x 365 நாள் x ரூ 30 | | 4,38,000 |
| பசும் பால் 20 லிட் x 365 நாள் | | 1,46,000 |
| தொழுவுரம் 100 டன் x ரூ 600 | | 60,000 |
| பஞ்சகவ்யா 500 லிட் x ரூ 50 | | 25,000 |
| ஆடு 12 x ரூ 2000 | | 24,000 |
| கோழி 300 x ரூ 180 | | 54,000 |
| முட்டை 500 x ரூ 4 | | 2,000 |
| மீன் 1,000 கிலோ x ரூ 80 | | 80,000 |
| மொத்தம் | 3,10,500 | 11,89,000 |
| நிகரலாபம் | | 8,78,500 |

**தொடர்புக்கு :**

வெங்கட்ராமன்,

அலைபேசி : 99431-88778